20.09.2024

அ.வ.எண். 529-2017

வாசா.2 - விவேக்

<u>2 முதல் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் டிப்ளமோ இன்ஜினியரிங் படித்துள்ளேன். இருகூர் கிராமம் வழக்கு புல எண் 118 ல் மொத்தமாக எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் 8.60 ஏக்கர் உள்ளது. இந்த 8.60 ஏக்கரில் 4.60 ஏக்கர் வழக்கு சொத்து, மீதமுள்ள சொத்து யாரிடம் உள்ளது என்றால் அதில் 2 ஏக்கர் எங்கள் வசம் உள்ளது. மீதம் 2 ஏக்கர் ஒரு பாபு என்பவர் வசம் உள்ளது. ஆதியில் இந்த வழக்கு சொத்தை நஞ்சப்ப கவுண்டர் என்ற நஞ்சையன் மற்றும் அவரது சகோதரர் சுப்பண்ண கவுண்டரும் இணைந்து கிரயம் பெற்றார்கள் என்றால் ஆமாம். நஞ்சைய கவுண்டரும் சுப்பண்ண கவுண்டரும் இந்த தாவா சொத்தை இதுவரை பதிவு செய்த பாகப்பிரிவினை ஏற்படவில்லை நீதிமன்றம் மூலம் பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்று தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் அசல் ஆவணம் எங்கள் வசம் உள்ளது, அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆவண எண்.404/1967 வாசா.ஆ.2 போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 ஆவணத்திற்கு முன்பாக 1963 ல் ஆவண எண்.1519/1963 ல் நஞ்சைய கவுண்டர் எஸ்.எல்.ராமராவ் என்பவருக்கு பதிவு அடமானம் ஏற்படுத்தி கொடுத்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த அடமான பத்திரம் கோவை சார்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.882/1974 ல் 1 மற்றும் 2ம் பிரதிவாதி வழக்கை நடத்தி அந்த அடமானத்தை மீட்டுள்ளனர் என்றால் எனக்கு தெரியாது.

சுப்பண்ண கவுண்டர் அவருடைய பாகத்தை கந்தசாமி கவுண்டருக்கு கிரயம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் அந்த அசல் ஆவணம் எங்கள் வசம் இல்லை. அந்த தாவா சொத்தில் தற்பொழுது என்ன விவசாயம் நடைபெற்று வருகிறது என்றால் மண் சோளம், மக்காச்சோளம் பயிரிடப்பட்டு வருகிறது, அதை நாங்கள் தான் பயிரிட்டு வருகிறோம். தாவாவில் பயிரிடுவதற்காக நாங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கு சொத்தில் பயிரிடவில்லை, 2ம் பிரதிவாதி தான் பயிரிட்டு வருகிறார் அதற்கான ஆவணங்கள் அவர் வசம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கோயம்புத்தூரில் வங்கியில் வேலை பார்க்கிறேன். கந்தசாமி கவுண்டருக்கு எத்தனை

வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. ஆறுமுகம், கந்தசாமி கவுண்டருக்கு சகோதரர். பொதுவாக சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு சொத்தை கிரயம் செய்ய வேண்டும் என்றால் கிரயம் செய்யும் நபர் அலைய வேண்டாம் என்பதற்காக பொது அதிகார பத்திரம் எழுதி கொடுப்பது வழக்கம் என்றால் ஆமாம். ஆறுமுகம் பொது அதிகாரம் எழுதிய தேதியும், என்னுடைய தகப்பனார் கிரயம் பெற்றதாக சொல்லப்படும் தேதியும் ஒரே தேதி என்றால் ஆமாம்.

பொது அதிகார பத்திரமும், கிரயமும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1967 ல் இந்த சொத்துக்களை ரூ.3000/- மற்றும் ரூ.4000/- என குறிப்பிட்டுள்ள நான் என் தகப்பனார் 1999 மற்றும் 2003 ம் ஆண்டில் எவ்வளவு தொகை கொடுத்து கிரயம் பெற்றார் என்று எனது சாட்சிய வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.18 வில்லங்க சான்றிதழில் 2005 முதல் 2014 வரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த வா.சா.ஆ.18 ல் 1ம் பிரதிவாதி பெயரும் 2ம் பிரதிவாதி பெயரும் அதை பின்னிட்டு மற்ற பிரதிவாதி பெயரும் உள்ளது என்றால் ஆமாம். 2005 வருடத்திற்கு முற்பட்ட வருடத்தினுடைய வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் என் தகப்பனார் மேற்படி ஆவணங்களை போலியாக தயார் செய்துள்ளதும் அதில் வில்லங்கத்தில் வராது என்பதால் அதை மறைக்கவே முந்தைய வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கிழக்கு புறத்தில் என்னுடைய தாத்தா ரங்கசாமி கவுண்டரின் சொத்து உள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்துடன் சேர்த்து வழக்கு சொத்தையும் அபகரிக்கவே நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/விவேக்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur